# திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை கோரி யாழ். பொலிசார் தாக்கல் செய்த மனு தள்ளுபடி

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரி யாழ்ப்பாணப் பொலிஸாரால் தாக் கல் செய்யப்பட்ட வழக்கை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தள்ளுபடிசெய்துள்ளது.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரி யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்று முன்தினம் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆறு பேரின் பெயர்கள் பிரதிவாதிகளாகக் குறிக்கப்பட்டு, பொலிஸார் அந்த மனுவைத் தாக் கல் செய்தனர்.

தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபன் என்பவரை நினைவு கூரும் செயற்பாடு இலங்கை சோசிலிச குடியரசின் வர்த்தமானி 1721/2 ஐயும், 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தேசிய ஒருமைப்பாடுகள் சட்டத்தையும் மீறுவதாக உள்ளது என்றும், நடத்தப்படும் பேரணியை 1979 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் தங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் இது தொடர்பான வழக்கு இன்றைய தினம் காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது எதிர்த்தரப்பு வாதத்தையடுத்து வழக்கை யாழ். நீதவான் நீதிமன்ற நீதிவான் தள்ளுபடி செய்தார். இவ் வழக்கில் எதிர் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி சுகாஷ் ஆஜராகியிருந்தார்.

அதேவேளை, நினைவேந்தலுக்குத் தடை செய்யக் கோரி வவுனியா மற்றும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றங்களில் கடந்த தினங்களில் தொடரப்பட்ட வழக்குகளும் அந்த நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 03 புதன்கிழமை 20.09.2023 கதிர் 76




## திலீபனின் நினைவேந்தலுக்கு எதிராக நாடாளுமன்றில் தயாசிறி போர்க்கொடி



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு எதிராகச் சபையில் இன்று போர்க் கொடி தூக்கியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர.

திலீபனின் நினைவேந்தல் ஊர்திப் பவனி மூலம் தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு இடையில் முரண்பாடு தோற்றம் பெறும் நிலை காணப்படுகின்றது என்று இதன்போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட கூற்றை முன்வைத்து 2➤



## தியாக தீபம் திலீபனின் 6 ஆம் நாள் உண்ணாவிரத நினைவேந்தல் இன்றையதினம் யாழ்ப்பாணத்தில்

யாழ்.நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் தொடர்ச்சியான நினைவேந்தல் ஒவ்வொரு நாளும் காலை 9 மணிக்கு இடம்பெற்று வருகின்றது. நினைவுத் தூபிக்கு அருகில் அடையாள உண்ணாவிரதமும் தொடர்ந்து இடம்பெறுகிறது.

இன்று காலை 6ஆம் நாளில் மாவீரர் ஒருவரின் தாயார் பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார்.

குறித்த பகுதியில் பொலிஸார், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் நின்றிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்துள்ளது. (O1)

## யாழ் பல்கலைக் கழக வளாகத்தில் திலீபனின் 6 ஆம் நாள் நினைவு

யாழ்ப்பாணம், செப். 20

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரத அறப்போராட்டத்தின் 6 ஆம் நாள் நினைவேந்தல் இன்று பல்கலைக் கழக பிரதான வளாக பொதுத் தூபியில் மாணவர்களால் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஆளணியினர், ஊடகவியலாளர் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (O1)



## ரணிலிடம் சமந்தா பவர் வழங்கிய உறுதி என்ன?

அமெரிக்காவுக்குப் பயணித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா சபையின் இணைக் காரியாலயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவரைச் சந்தித்துள்ளார்.

இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்தபோது ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி இதன்போது நன்றி தெரிவித்தார். 2➤


## மூன்று கோடி ரூபா பெறுமதி மிக்கதான போதைப்பொருள் மன்னாரில் சிக்கியது

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுப் பாடு இராஜப்பு ஜோசப் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள பகுதியில் உலகிலேயே மிக விலை உயர்ந்த போதைப்பொருளான ஹொக்கைன் வகை போதைப்பொருளை வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து ஒரு கிலோ 12 கிராம் கொக்கைன் வகை போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் 2➤



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் துரத்துவோம் மன்னாரில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளால் பரபரப்பு



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி பவனி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மக்களின் நினைவேந்தலுக்காகச் சென்று வருகின்றது.

இந்த நிலையில், குறித்த நினைவேந்தல் பவனிக்கு எதிராக மன்னாரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இன்று அதிகாலை மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலும் தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்ற பெயரில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# உயர்தரப் பரீட்சை பிற்போடப்படுமா? நாளை விளக்கமளிக்க அமைச்சர் உறுதி

2023 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை தொடர்பாக நாளை விளக்கமளிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இன்று ,டம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ,தனைக் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு அதிக அழுத்தம் கொடுக்காத வகையில், நவம்பர் 27 ஆம் திகதி தொடங்கவிருந்த பரீட்சையை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சி நாடா



ளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துவரு கின்ற நிலையில், நாளை அமைச்சரது விளக்கமளிப்பு தொடர்பாக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. (04)

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை சதொச குறைத்தது

லங்கா சதொச நிறுவனம் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை இன்று முதல் குறைத் துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு கிலோ சோயாமீற் 45 ரூபா குறைக் கப்பட்டு புதிய விலை 580 ரூபாவாகவும், ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 40 ரூபா குறைக்கப்பட்டு புதிய விலை 290 ரூபாவாகவும், ஒரு கிலோ நெத்தலி 30 ரூபா குறைக்கப்பட்டு புதிய விலை 1,100 ரூபாவாவும் ஒரு கிலோ வெள்ளைப் பூடு 30 ரூபா குறைக்கப்பட்டு புதிய விலை 620 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

ஒரு கிலோ வெங்காயம் 15 ரூபா குறைக்கப்பட் டுள்ளதுடன், அதன் புதிய விலை 195 ரூபாவா விற் கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## மலர்ச்சாலை வாகனம் மோதி வயோதிபர் பலி

திருகோணமலையில் உள்ள மலர்ச்சாலையொன் றின் வாகனம் மோதி வயோதிபர் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - நிலாவெளி பிரதான வீதியின் ஆனந்தபுரி பகுதியில் இன்று காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த வயோதிபர் மீது அவ்வீதியால் வேகமாகப் பயணித்த மலர்ச்சாலை வாகனம் மோதியுள்ளது.

இதன்போது அந்த வயோதிபர் சம்பவ ,டத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் பழனி யாண்டி (வயது 78) என்ற நபரே உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக் காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மலர்ச்சாலை வாகனத்தின் சாரதியைக் கைது செய் துள்ள உப்புவெளி பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (அ)

## தமிழ்த் தேசிய மக்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சுவரொட்டியில் “தமிழ் ஈழத்திற்காக உண் ணாவிரதம் இருந்து உயிர் தியாகம் செய்த மாவீரன் திலீபனின் தியாகத்தை விற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் துரத்துவோம்” என்று அச்சி டப்பட்டுள்ளது.

குறித்த சுவரொட்டிகளை மன்னார் மாவட்டத்தில் இராணுவப் புலனாய்வாளர்களே ஒட்டியுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## ரணிலிடம் சமந்தா பவர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றி சுருக்கமாக விளக்கமளித்த ஜனாதிபதி, அதனை வெற்றிகரமாக நிறைவு செய்வ தற்கு அரசின் அர்ப்பணிப்பையும் எடுத்துரைத்தார்.

மேலும், ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டதன் பின்னரான செயன்முறைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்குப் பயிற்சி பெற்ற பணியாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பி லான சவாலுக்கு முகம் கொடுத்திருப்பதாகவும், அத னால் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளமையின் பலன்களை அடைந்துகொள்ள இன்னும் இரண்டு வருடங்கள் அவசியப்படும் எனவும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், ஊழலுக்கு எதிரான கொள் கையை அமுல்படுத்துவதற்கு தமது அரசின் முழு அரச பொறிமுறையும் முழுமையாக உட்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, இந்தச் செயற்பாடுகளை விரைவாக நிறைவு செய்வதற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

“அஸ்வெசும” வேலைத்திட்டத்தின் அறிமுகத்தினூ டாக நலன்புரித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதில் இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பில் இந்தச் சந்திப் பின் போது ஜனாதிபதியால் விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்கு ஐக்கிய அமெ ரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறு வனம் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதேவேளையில் தேவையான நிபுணத்துவ உதவிகளையும் வழங்கும் என்று சமந்தா பவர் இதன்போது தெரிவித்தார். (அ)

## மூன்று கோடி ரூபா பெறுமதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர் எல்.வை.ஏ.எஸ். சந்திரபாலவின் பணிப்புரைக்கு அமைவாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகேயின் ஆலோசனையின் பேரில், உப பொலிஸ் பரிசோதகர் ஜே.ரி.யூ.ஜெயவர்தன தலைமையிலான குழுவினரான குணசிங்க (75927), அசங்க (66638), பொலிஸ் கான்ஸ்டபிள்களான விமுர்த்தி (83790), திஸாநாயக்க (90465), சுகிர்தரன் (25227), கருணா சிங்க (37662), அபயகோன் (35399), பிரேமரத்ன (37882) ஆகிய 9 பேர் அடங்கிய குழுவினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் தாழ்வுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த 34 வயதான நபராவார்.

சந்தேகநபரிடம் மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருளுடன் ஆஜர்படுத்தவுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கெக்கைனின் தற்போதைய சந்தை மதிப்பு மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## திலீபனின் நினைவேந்தலுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையில் அவர் மேலும் கூறுகையில்,

“திலீபனின் நினைவேந்தல் தற்போது அனுஷ்டிக் கப்படுகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப் பினராகத் திலீபன் இருந்தாலும் அவர் அஹிம்சை வழியில் போராடி இறுதியில் உயிர்த் தியாகம் செய்தார்.

திலீபனின் நினைவேந்தல் தற்போது பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது. திலீபனின் உருவப் படத்தைச் சுமந்த வண்ணம் ஊர்திப் பவனி மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் செல்லும்போது இடைவழியில் தாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பினரால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான சிங்களவர்கள் வசிக்கும் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் அதிகளவில் வாழும் பகுதிக்குச் செல்லாமல் இந்த ஊர்திப் பேரணி திருகோணமலைக்குச் சென்றிருக்கலாம். ஆனால், அவ்வாறு செல்லாமல் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் சிங்க ளவர்களின் கோபத்தைத் தூண்டிவிடும் வகையில் இந்த ஊர்திப் பவனி சென்றுள்ளது.

நான் சிங்களவர்களுக்கு ஆதரவாகவும், தமிழர்க ளுக்கு எதிராகவும் உரையாற்றவில்லை. திலீபனின் நினைவு ஊர்திப் பவனியால் தமிழ் - சிங்கள சமூ கங்களுக்கு இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் நிலை காணப்படுகின்றது.

அனுமதி பெறாத ஒரு பவனிக்குப் பொலிஸார் எவ்வாறு அனுமதி வழங்கினார்கள் என்பது பிரச்சினைக் குரியதாக உள்ளது. ஆகவே, இந்தப் பிரச்சினைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காண வேண்டும். திலீபனின் நினைவேந்தல் பவனி தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்க வேண்டும்.” - என்று தெரிவித்தார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, “இவ்விடயம் தொடர்பில் பொதுமக் கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கலந்துரையாடி ஒரு தீர் மானத்தை அறிவிக்குமாறு வலியுறுத்துகின்றேன்.” - என்றார். (அ)





உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# யாழ்ப்பாணம், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இலவச கண்புரை சிகிச்சைக்கான தெரிவு சனிக்கிழமை

யாழ் மாவட்டத்தில் கண்புரை (கட்ராக்ட்) சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கான கண்புரை சத்திர சிகிச்சையினை யாழ் போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுக்கான சத்திரசிகிச்சைகள் கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மலரவன் அவர்களது குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்கண்புரை சத்திரசிகிச்சைத் திட்டமானது ஐக்கிய இராச்சியத்தின் அசிஸ்ட் ஆர் ஆர் நிறுவனத்தினால் ஒருங்கிணைக்கப்படுவதுடன், சத்திர சிகிச்சைகளுக்கான கண்வில்லைகளும், சத்திரசிகிச்சை நுகர்வு பொருட்களும் மற்றும் மருந்துப் பொருட்களும் மலேசியாவைச் சேர்ந்த அலாக்கா மற்றும் ஆனந்தா நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில், யாழ்ப்பாணச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் (இந்து விடுதி) இடம்பெறவுள்ளது.

அதேபோன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இலவச மருத்துவ முகாமும் அதே தினம் காலை 9 மணி தொடக்கம் அரியாலை நாவலடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த முகாமில், கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்கு அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய வைத்தியசாலைகளில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும், சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைக்குக் கூட்டிச்செல்வதற்குமான போக்குவரத்து வசதிகள் சுகாதாரத் திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே, கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (O1)

# மாளிகாவத்தை துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் உயிரிழப்பு

கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை சிகிச்சை பெற்று வந்த நபர் 20 நாட்களின் பின் இன்று உயிரிழந்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி மாளிகாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இந்த நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

"மாளிகாவத்தை பிரதீப்" என அழைக்கப்படும் 38 வயதான நபரே உயிரிழந்துள்ளார். இவர் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடும் குழு உறுப்பினரும், போதைப் பொருள் கடத்தல்காரரான "பஞ்சிகாவத்தே நெவில்" என்பவரின் சகாவும் ஆவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த நபர் மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 20 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கொழும்பு குற்றப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

"கெசல்வத்த தினுக" குழுவினரால் பழிவாங்கும் நோக்குடன் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (அ-O1)

# சிறுவர் வன்முறைக்குறைப்பு உளவளத்துணைக் கூட்டம்



(வி.ரி.சகாதேவராஜா)

சிறுவர் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குறைப்பு மற்றும் உளவளத்துணை தொடர்பான கூட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்கள் பகிரப்பட்டதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

குறிப்பாக சிறுவர் இடைவிலகலை கட்டுப்படுத்தல், சிறுவர் பாதுகாப்பு மிகுந்த நிலையான குடும்பச் சூழலை உருவாக்குதல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் தராதரங்களை கண்காணித்தல், பல்துறை சார்ந்த ஒருங்கிணைப்புகளை பலப்படுத்தல், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பை பெற்றுக் கொடுத்தல், குடும்ப வன்முறைகளை குறைப்பது தொடர்பில் கையாளப்பட வேண்டிய விடயங்கள், உளநல பாதிப்புற்றோர் தொடர்பில் கையாள வேண்டிய நடவடிக்கைகள் என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன் மற்றும் வலயக் கல்வி அலுவலகம், பொலிஸ் திணைக்களம், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் முகாமையாளர்கள்,

கிராம சேவை உத்தியோத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏனைய துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான பகுப்பாய்வுகள், வாழ்வாதார மதிப்பீடுகள்

(எம்.எப்.நவாஸ்)

சந்தை பற்றிய பகுப்பு ஆய்வுகள் மற்றும் வாழ்வாதார மதிப்பீடுகள் என்ற தலைப்பின் கீழ், தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான நிகழ்வு நேற்று அக்கரைப்பற்று பிரதேச செயலக கூட்டமண்டபத்தில் பிரதேச செயலாளர் டி.எம். அன்சார் வழிகாட்டலில், உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
A1
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# பெரு நாட்டில் மலைப்பாதையில் பஸ் கவிழ்ந்து விபத்து 24 பேர் பலி



தென் அமெரிக்க நாடான பெரு நாட்டின் அயகுச்சோவா பகுதியில் இருந்து ஹுகான்சாயோவுக்கு பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. மலைப்பாங்கான பகுதியில் உள்ள கொண்டை ஊசி வளைவுகளில் பஸ் சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை திடீரென இழந்தது. இதனால் நிலைதடுமாறி மலைப்பாதையில் உருண்டு விழுந்து விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் பஸ் சிக்கி அப்பளம்போல் நொறுங்கியது. விபத்து குறித்து அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் குழந்தைகள், பெண்கள் உள்பட 24 பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

## ஈராக் விமான நிலையம் மீது துருக்கி ‘டிரோன்’ தாக்குதல்

ஈராக் விமான நிலையம் மீது துருக்கி ராணுவத்தினர் டிரோன் தாக்குதல் நடத்தினர். இதில் 6 பேர் உயிரிழந்தனர்.

ஈராக் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள முக்கிய நகரங்கள் குர்திஸ்தான் பிராந்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஈராக், துருக்கி நாட்டு பிரிவினைவாதிகள் பலர் செயல்பட்டு வருகின்றனர். இந்த பிராந்தியத்தை ஆட்சி செய்து வரும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியை அண்டை நாடான துருக்கி பயங்கரவாத அமைப்பாக அறிவித்துள்ளது. மேலும் அவர்களை ஒழிக்க தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அதற்கு பதிலடி அளிக்கும் வகையில் குர்திஸ்தான் ஆதரவு போராளிகள் பெரும்பான்மையினத்தவர்களின் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். இதனால் இருதரப்பிலும் உயிர்பலி ஏற்பட்டு போர் பதற்றம் மிகுந்த பகுதியாக உள்ளது.

ஈராக்கின் வடக்கு பகுதியின் குர்திஸ் பிராந்தியத்திற்குட்பட்ட சுலைமானியாவில் இருந்து 50 கி.மீ தூரத்தில் அர்பட் நகர் அமைந்துள்ளது. அங்குள்ள விமான நிலையத்தை குர்திஸ்தான் ஆதரவாளர்கள் போர் பயிற்சி உள்ளிட்டவற்றுக்காக பயன்படுத்தி வந்தனர். அங்கிருந்து இயக்கப்படும் விமானங்கள் துருக்கி நாட்டின் எல்லைகளுக்குள் ஊடுருவி போராட்டகாரர்கள் தாக்குதல் நடத்துகிறார்கள்.

இதனால் துருக்கி ராணுவத்தினர் ராணுவ மூலோபாய முக்கியத்துவம் பெற்ற இந்த விமான நிலையத்தை தகர்க்க திட்டம் தீட்டி வந்தனர். அதன்படி நவீன தொழில்நுட்பம் கொண்ட டிரோன்களை ஏவி விட்டு அர்பட் விமான நிலையத்தின் மீது துருக்கி ராணுவத்தினர் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதனை சற்றும் எதிர்பார்த்திராத குர்திஸ்தான் ராணுவத்தினர் விமான நிலையத்திற்குள் புகுந்த டிரோன்கள் மீது சரமாரி தாக்குதல் நடத்தினர். இருப்பினும் டிரோன்களின் அதிரடி தாக்குதலை சமாளிக்க முடியாமல் திணறினர்.

அதனை வாய்ப்பாக பயன்படுத்தி கொண்டு டிரோன்கள் குண்டுமழை பொழிந்து விமான நிலையத்தை தகர்த்தன. பலம்பொருந்திய டிரோன்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் குர்திஸ்தான் கட்டுப்பாட்டில் இருந்த விமான நிலையம் தரைமட்டமாகி குப்பை மேடாக காட்சி அளித்தது.

இந்த தாக்குதலில் குர்திஸ்தான் ஆதரவு போராளிகள் 6 பேர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர். தாக்குதல் குறித்து குர்திஸ்தான் ஆதரவு தலைவர் பாவேல் தலபானி துருக்கியின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மேலும் படுகாயம் அடைந்தவர்கள் நலம் பெறவேண்டி ஆறுதல் தெரிவித்தார்.

## கண்காணிப்பாளர்களுக்கு ஈரான் அனுமதி வழங்கவேண்டும்! ஐ.நா. அணுசக்திக் கண்காணிப்பு அமைப்பு வலியுறுத்தியது



ஈரானில் சர்வதேச அணுசக்திக் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா.வின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான ஐ.ஏ.இ.ஏ. வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து ஈரான் அதிபர் இம்ராஹிம் ரய்சிக்கு அந்த அமைப்பின் தலைவர் ரஃபேல் கிராஸி எழுதியுள்ள கடிதத்தில், ஈரானின் அணுசக்தித் திட்டங்களை ஆய்வு செய்வதற்கான அனுமதி கணிசமான ஐ.ஏ.இ.ஏ. நிபுணர்களுக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஐ.ஏ.இ.ஏ. நிறுவியுள்ள பல கண்காணிப்பு கமராக்களையும் ஈரான் அரசு நிறுத்திவைத்துள்ளது. இந்தக் காரணங்களால் ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் அமைதிக்கானவைதான் என்பதை எங்களால் உறுதி செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே, இது தொடர்பான உத்தரவுகளை ரத்துச் செய்து, அனைத்து ஐ.நா. பார்வையாளர்களுக்கும் அனுமதி அளிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்குவதற்கு எதிராக, அந்த நாட்டின் மீது மிகக் கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனால், ஈரானின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில், தங்களது அணுசக்தித் திட்டங்கள், அணு ஆயுதங்களை உருவாக்குவதற்காக இல்லை என்பதை உறுதி செய்ய ஈரானும், அதற்குப் பதிலாக ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளைத் தளா[illegible]த்த அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளும் சம்மதித்து கடந்த 2015 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொண்டன.

அமெரிக்க அதிபராக ஒபாமா இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அடுத்து வந்த அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 2018 இல் அறிவித்தார். அத்துடன், ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அவர் மீண்டும் அமல் படுத்தினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அணுசக்தி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஏராளமான சர்வதேச அணுசக்திப் பார்வையாளர்களுக்கான அனுமதியை ஈரான் ரத்துச் செய்துள்ளது. (04)

## இந்தியாவுடனான வர்த்தகப் பேச்சுக்களைப் பாதிக்காது கனடாவின் குற்றச்சாட்டுக் குறித்து பிரிட்டன் கருத்து



காலிஸ்தான் பிரிவினைவாதத் தலைவர் கொலை தொடர்பாக இந்தியா மீது கனடா தீவிரமான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ள நிலையில் இந்தியாவுடனான வர்த்தகப் பேச்சுகள் பாதிக்கப்படாது என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ காலிஸ்தான் பிரிவினைவாதியின் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளதற்கான ஆதாரம் இருப்பதான கனடாவின் கருத்தினால் இந்தியா - கனடாவுக்கிடையில் பெரும் சர்ச்சை வெடித்துள்ளது.

இது இரு நாட்டு உறவில் பெரும் பின்னடவை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இரு நாடுகளின் சர்வதேச உறவுகளிலும் இந்தப் பிரச்னை தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இந்த நிலையில் லண்டனில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கின் செய்தித் தொடர்பாளரிடம் இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு, ‘இந்த விடயம் தொடர்பாக கனடா அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்து வருகிறோம். கனடா கூறியுள்ளது மிகவும் தீவிரமான குற்றச்சாட்டாகும். எனினும், விசாரணை முழுமையாக நிறைவடைந்த பிறகே கருத்துத் தெரிவிக்க முடியும். ஆயினும், இந்த விவகாரத்தால் இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக பேச்சுவார்த்தை பாதிக்கப்படாது. அது முன்புபோல தொடரும்’ என்று பதிலளித்துள்ளார். (04)

## நியூசிலாந்தில் நிலநடுக்கம்



நியூசிலாந்தில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. வெல்லிங்டன், நியூசிலாந்து நாட்டின் மேற்கு கிறிஸ்ட் சர்ச்சில் நகரில் இருந்து 124 கிலோ மீட்டர் தொலைவில் மத்திய தெற்கு தீவில் இன்று அதிகாலை திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது.

நவாஸ் ஷெரீப் பேச்சு ரிக்டர் அளவில் 5.6 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்தன. இதனால், மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர்.

14 ஆயிரத்திற்கும் அதிகமானோர் நிலநடுக்கத்தை உணர்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேவேளை, இந்த நிலநடுக்கத்தால் யாருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை என முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

# உலக தற்கொலைத் தடுப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்குகள்!



(வி.ரி. சகாதேவராஜா)

உலக தற்கொலைத் தடுப்புத் தினத்தினை முன்னிட்டு கல்முனை வலய பாடசாலைகளில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் இரா.முரளீஸ்வரனின் வழிகாட்டலில் கல்முனை கால்மேல் பாத்திமா தேசியப் பாடசாலை, கல்முனை உவெஸ்லி தேசிய பாடசாலை மற்றும் கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் இக்கருத்தரங்குகள் முதற் கட்டமாக நடைபெற்றன.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்ற இந் நிகழ்வில், வைத்தியசாலையின் மனநலப் பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் டொக்டர் யூ.எல். சராப்டீன் தாதிய உத்தியோகத்தர்களான அழகரட்ணம், திருமதி. நி.மனோஜினி மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

வைத்தியசாலையின் மனநலப் பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் டொக்டர் சராப்டீன், மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம் மற்றும் தற்கொலை உணர்வைத் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வு, மன அழுத்த நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையைத் தொடர்பு கொள்ள வேண்டிய 1926 என்ற தொலைபேசி இலக்கம் போன்றவை தொடர்பாக உரையாற்றினார்.

மனச்சோர்வு சம்மந்தமான மாணவர்களின் சந்தேகங்களுக்கான விளக்கமளிப்பு, ஆசிரியர்கள் மாணவர்களுடனான கலந்துரையாடல் போன்றனவும் இடம்பெற்றன.

# வீதிகளுக்குப் பெயர்ப் பலகை இல்லாமையால் அசௌகரியம்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் குறுக்குத் தெருக்களுக்கும் பெயர்ப் பலகைகளை அமைக்குமாறு சாய்ந்தமருது கல்வி, சமூக, கலாசார அபிவிருத்தி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை மாநகர சபைப் பிரதேசங்களில் நீண்ட காலங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த வீதிப் பெயர்ப் பலகைகள் சேதமடைந்தும் அழிவடைந்தும் காணப்படுவதுடன் சில வீதிகளின் பெயர்ப் பலகைகள் இருந்த இடமும் இல்லாமல் போயுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு சில மாதங்களுக்கு முன்னர் இப்பிரதேசங்களில் உள்ள வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான சில பெரிய வீதிகளுக்கு மாத்திரம் பெயர்ப் பலகைகள் இடப்பட்டுள்ளன. எனினும் மாநகர சபைக்கு சொந்தமான வீதிகளுக்கு இன்னும் பெயர்ப் பலகைகள் அமைக்கப்படவில்லை.

பெரும்பாலான வீதிகளுக்கு பெயர்ப் பலகை இல்லாததன் காரணமாக வெளியிடங்களில் இருந்து வருகை தருகின்ற பயணிகள் மாத்திரமல்லாமல் உள்ளூர் மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொது மக்கள் தமது வசிப்பிடத்தை அடையாளப்படுத்துவதற்கு வீதியின் பெயரையே குறிப்பிட்டுக் கூறுவர். ஆனால், ஏனையோர் அதனைப் புரிந்து கொள்வதற்கு, குறித்த வீதியின் பெயரை அறிந்திருக்க வேண்டும். அதனை அவ்வீதியின் பெயர்ப் பலகையைக் கொண்டே அவர்களால் அறிந்து கொள்ள முடியும்.

ஆகையினால், இனியும் காலம் தாமதிக்காமல் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் ஒழுங்கைகளுக்கும் பெயர்ப் பலகைகளை இடுவதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.




# கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் மூலம் போட்டோ பிரதி இயந்திரம் அன்பளிப்பு



(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை அஸ்-ஸுஹறா வித்தியாலயத்திற்கு லுறுஆயு மற்றும் ஊளுஆறுயு ஆகிய அமைப்புகளின் அனுசரணையுடன் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன், நவீன போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர். மஜீதிய்யா விடுத்த வேண்டுகோளை ஏற்று, கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

திங்கட்கிழமை இடம்பெற்ற காலை ஆராதனை நிகழ்வில் அவர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு போட்டோப் பிரதி இயந்திரத்தை வழங்கி வைத்தார்.

இதன்போது, கோட்டமட்ட சிறுவர் தடகளப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற தரம்-3 ஆண், பெண் மாணவர்கள் மற்றும் தரம்-4 ஆண் மாணவர்களும் ரஹ்மத் மன்சூரினால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பவுண்டேசன் நிர்வாகிகள், பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து கொண்டனர்.

# காரைதீவு பாலையடி வால விக்கினேஸ்வரர் வருடாந்த மஹோற்சவத் தீர்த்தோற்சவம்



காரைதீவு பாலையடி வால விக்கினேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத் தீர்த்தோற்சவம், மஹோற்சவ குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை சமுத்திரத்தில் இடம்பெற்றது.

(படங்கள் வி.ரி. சகாதேவராஜா)

# யாழ். பல்கலையில் திலீபன் நினைவு குருதிக்கொடை வழங்கல் நிகழ்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்திய குருதிக்கொடை நிகழ்வு நேற்றுப் பல்கலைக்கழக மாணவர் கட்டத் தொகுதியில் நடைபெற்றது.

இதன்போது பல பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்னர்.

குருதிக்கொடையின் இரண்டாவது அங்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக தொழில்நுட்பப் பீடத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கும் போர்ப் பதற்றம்

# ஆர்மீனிய ஆதரவுப் பகுதியில் அசர்பைஜான் தாக்குதல்கள்!

ஆர்மீனிய ஆதரவுப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள சர்ச்சைக்குரிய நகோர்னோ - கராபக் பிராந்தியத்தில் தங்களது படையினர் 'பயங்கரவாதத் தடுப்பு' நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக அசர்பைஜான் நேற்று அறிவித்துள்ளது.

இதையடுத்து, ஏற்கெனவே பல முறை மோதலில் ஈடுபட்டுள்ள அந்த இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அசர்பைஜானின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நகோர்னோ - கராபக் பிராந்தியத்தில் கண்ணி வெடிகளில் சிக்கி 4 அசர்பைஜான் வீரர்களும், பொதுமக்கள் இருவரும் உயிரிழந்தனர். அதனைத் தொடர்ந்து, அந்தப் பிராந்தியத்தில் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

எல்லையிலும், அதற்கு அப்பால் தொலைதூரத்திலும் அமைக்கப்பட்டுள்ள ஆர்மீனியப் படைகளின் நிலைகளைக் குறிவைத்து துல்லியத் தாக்குதல் நடத்தப்படுகிறது. சட்டத்துக்குட்பட்ட நிலைகள் மட்டுமே தாக்குதல் நடத்தி அழிக்கப்பட்டு வருகின்றன, என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது நகோர்னோ - கராபக் பிராந்தியத் தலைநகரான ஸ்டெபனாகெர்ட் மீது சரமாரியான குண்டுவீச்சு நடத்தப்பட்டதாக ஆர்மீனிய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுகளான ஆர்மீனியாவுக்கும், அசர்பைஜானுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லைப் பிரச்னை இருந்து வருகிறது. ஆர்மீனியப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகோர்னோ - கராபக் பிராந்தியம், அசர்பைஜானின் ஓர் அங்கமாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருந்தாலும், கடந்த 1994 ஆம் ஆண்டுப் போருக்குப் பிறகு அந்தப் பகுதி ஆர்மீனியா ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சர்ச்சைக்குரிய அந்தப் பிராந்தியத்தில் ஆர்மீனியாவும், அசர்பைஜானும் தங்களது படைகளைக் குவித்துள்ளன. இதனால், இரு தரப்பினரும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். நகார்னோ - கராபக் பிராந்தியத்தில் இரு நாட்டுப் படையினருக்கும் இடையே கடந்த 2020 இல் நடைபெற்ற 6 வாரப் போரில் 6,600க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.



இந்தப் போரின்போது முக்கியத்துவம் வாய்ந்த சில பகுதிகளை அசர்பைஜான் ராணுவம் மீட்டதாக அறிவிக்கப்பட்டது. அவற்றில், நகோர்னோ - கராபக் பிராந்தியத்துக்கும் ஆர்மீனியாவுக்கும் இடையிலான ஒரே சாலை இணைப்பான லச்சின் வழித்தடமும் ஒன்றாகும்.

பின்னர் ரஷ்யாவின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்துக்குப் பிறகு அந்தச் சண்டை முடிவுக்கு வந்தது. அந்தப் பகுதியில் அமைதி நிலவுவதை ரஷ்ய அமைதிப் படையினர் கண்காணித்து வந்தனர். இந்த நிலையில், அசர்பைஜான் கட்டுப்பாட்டில் இருக்கும் லச்சின் வழித்தடத்தில் சாலைப் போக்குவரத்தை அந்த நாடு முடக்கியதாக ஐ.நா.வில் ஆர்மீனியா குற்றஞ்சாட்டியது. இதன் காரணமாக அந்தப் பிராந்தியத்துக்கு அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாததால் அங்கு வசிக்கும் சுமார் 1.2 லட்சம் பேர் பட்டினியால் இறக்கும் அபாயம் உள்ளதாகவும், இந்த நடவடிக்கை மூலம் அசர்பைஜான் இன அழிப்பில் ஈடுபடுவதாகவும் ஆர்மீனியா கூறியது.

இதனைத் திட்டவட்டமாக மறுத்த அசர்பைஜான், தங்களது நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் மட்டுமே தாங்கள் ஈடுபடுவதாகக் கூறியது. ஆர்மீனியாவிலிருந்து அந்த நாட்டு ராணுவ வீரர்கள் சட்டவிரோதமாக வந்துபோவதையும், ஆயுதங்களைக் கொண்டு செல்வதையும் தடுப்பதற்காக லச்சின் போக்குவரத்து வழித்தடத்தில் சோதனைச் சாவடி அமைத்துள்ளதாக ஐ.நா.வில் அசர்பைஜான் விளக்கமளித்தது.

இன அழிப்புக் குற்றச்சாட்டையும் மறுத்த அந்த நாடு, நகோர்னோ - கராபக் பிராந்திய மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்வதற்காக மற்ற வழித்தடங்கள் திறந்தே இருப்பதாகக் கூறியது. இந்த விவகாரத்தில் பதற்றத்தைத் தணிப்பதற்கான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாததற்கு ஆர்மீனியாவும், அசர்பைஜானும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டிக்கொண்டன.

இந்த நிலையில், ஆர்மீனியாவின் கண்ணி வெடியில் தங்கள் நாட்டைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்ததால் நகோர்னோ - கராபக் பிராந்தியத்தில் 'பயங்கரவாதத் தடுப்பு' நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறி, அந்தப் பகுதியில் அசர்பைஜான் தாக்குதல் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

இது, கடந்த 2020 ஆம் ஆண்டைப் போலவே முழுப் போராக உருவெடுத்து, ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (04)



# பொதுமக்களுக்கும் பாதுகாப்பில்லை பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பில்லை!

## சபையில் கூட்டமைப்பு எம்.பி. சார்ள்ஸ் சீற்றம்



"நாட்டின் பொதுமக்களுக்கும் பாதுகாப்பில்லை மக்கள் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பில்லை. புலனாய்வுப் பிரிவினர் பலவீனமடைந்து விட்டார்கள் என்றால் திறமையான புலனாய்வாளர்களை வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்." - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நாட்டின் இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுகள் வீழ்ச்சியடைந்துள்ளனவா? அல்லது ஆட்சியாளர்கள் அடாவடிகளுக்குத் துணைபோகின்றார்களா? போன்ற கேள்விகள் எழுகின்றன.

கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தியாக தீபம் திலீபனின் ஊர்தியில் செல்லும்போது பொலிஸ், இராணுவப் புலனாய்வாளர்கள் முன்னிலையில் சிலரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மிகவும் கொடூரமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவ்விடத்தில் இருந்த பொலிஸார், இராணுவத்தினர் ஏன் இந்தத் தாக்குதலைத் தடுக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இது தொடர்பில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

இது தொடர்பில் கண்டனங்கள் உள்ளன. இதனைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்கின்றேன். இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். இல்லையேல் இதன் தொடர்ச்சி மிகவும் மோசமாக இருக்கும். இன்னும் தாக்குதல்கள் அதிகரிக்கும்.

பொதுமக்களின் பாதுகாப்பு தற்போது பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பகிரங்கமாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

பொது மக்களுக்கும் பாதுகாப்பில்லை, மக்கள் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பில்லை. அனுராதபுரம் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக்க பிரேமரத்னவை இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அதனை யார் நடத்தினர், அவர்களிடம் துப்பாக்கி அப்படி வந்தது போன்ற கேள்விக்கு பொலிஸ் பாதுகாப்பு அமைச்சர் பதிலளிக்க வேண்டும்.

இலங்கையின் புலனாய்வுத்துறை வீழ்ச்சியடைந்திருக்க வேண்டும் அல்லது ஆட்சியாளர்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்குத் துணைபோக வேண்டும். இதில் ஒன்றுதான் சரியாக இருக்க வேண்டும்.

உங்களிடம் புலனாய்வாளர்கள் இல்லையென்றால் புலனாய்வாளர்களை உங்களுக்குத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மிகவும் திறமையானவர்கள் உள்ளனர். இரண்டு, மூன்று நாட்களில் இந்த விடயத்தை யார், எதற்காகச் செய்தனர் என்பதனைக் கண்டறியும் புலனாய்வாளர்கள் உள்ளனர்.

எவ்வாறாயினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து சபாநாயகர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் எங்கள் மீதும் துப்பாக்கிச் சூட்டை நடத்தி நாங்கள் இறந்தால் அதைக் கண்டுபிடிக்க முடியாத நிலையே உள்ளது.

இதேவேளை, கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி மன்னார் பகுதியில் விவசாய நடவடிக்கைக்குச் சென்று வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர். ஆனால், இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்று தெரிந்தும் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தத் துப்பாக்கி யாருடையது? ஏன் இந்த விசாரணையை ஆட்சியாளர்கள் தாமதப்படுத்த வேண்டும்?

அரசியல் பண பலம் படைத்தவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? அதற்கு உடந்தையாக இருப்பவர்கள் யார்? குற்றச்செயல்களைத் தடுக்கவிட்டால் பாதுகாப்புத் தரப்பு மீது மக்கள் நம்பிக்கைகொள்ள மாட்டார்கள். அது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்." - என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி செப்டெம்பர் 22 முதல் ஒக்டோபர் 1 வரை

இம்முறையும் கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் ஒக்டோபர் முதலாம் திகதி வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


பெருமளவினர் இம்முறையும் புத்தகக் கண்காட்சியைப் பார்வையிட வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு வருகை தருபவர்களின் வசதி கருதி, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலிருந்து பொரளை, நகர மண்டபம், பம்பலப்பிட்டி வரை விசேட போக்குவரத்து வசதிகள் வழங்கப்படவுள்ளன எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கண்காட்சியைப்பார்வையிட வரும் மக்களின் பாதுகாப்பு காப்புறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுக்கின்றது.

அத்துடன், இலவசமாகக் குடிநீரும் வழங்கப்படவுள்ளது. அதற்காக எல்லா இடங்களிலும் குடிநீர் பில்டர்கள் வைக்கப்படவுள்ளன. அவசர முதலுதவிக்காக சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் சேவையும் செயல்படுவதுடன், அங்கு குருதியில் சர்க்கரை அளவினை அளவிட்டுக் கொள்ளவும் முடியும்.

இவை அனைத்திற்கும் மேலாக பிரதான மேடையில் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வருடம் புத்தகக் கண்காட்சியில் மொத்தமாக 500 கண்காட்சிக் கூடங்கள் இடம்பெறவுள்ளன. இதில்




உள்நாட்டு கண்காட்சி கூடங்கள் உட்பட இன்னும் சுமார் 40 வெளிநாட்டு கண்காட்சி கூடங்களும் அடங்குகின்றன. குறிப்பாக இந்தியா, சீனா, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஈரான் போன்ற நாடுகளின் கூடங்கள் இதில் அடங்கும். (ரெ-16)

## 45 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் இருவர் கைது!

*சட்டவிரோதமான முறையில் 45 இலட்சம் ரூபாவுக்கு அதிக பெறுமதியுடைய வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சுங்க திணைக்கள அதிகாரிகளின் சோதனை நடவடிக்கையின்போது, அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கைதானவர்களிடம் இருந்து 45 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டதுடன் அவை 45 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியுடையவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.*

*கல்முனை பகுதியைச் சேர்ந்த ஆணொருவரும், யட்டியாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)*

## விடுதிக்குள் புகுந்த இளைஞன் 16 வயதுச் சிறுமி மீது பலாத்காரம்

*பதினாறு வயதுச் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்படும் இருபத்தி ஆறு வயதுடைய திருமணமான நபர் பியகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளது.*

*ஹட்டன் பிரதேசத்தை சேர்ந்த இந்தச் சிறுமி தனது தாயாருடன் பியாகமவில் அமைந்துள்ள விடுதியொன்றில் தற்காலிகமாகத் தங்கியிருந்த போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.*

*திருமணமான இந்த இளைஞன் சிறுமியுடன் சுமார் ஒரு மாத காலம் தொடர்பை ஏற்படுத்தி, பின்னர் அதனை நிறுத்தியதாகக் கூறப்படுகிறது. பின்னர், இந்த இளைஞன் சிறுமியின் தாயார் வெளியே சென்றிருந்த நேரம் பார்த்து விடுதிக்குள் புகுந்து சிறுமி மீது இந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளதாகத் தெரிகிறது. அந்த இளைஞனும் ஹட்டன் பிரதேசத்தவர் என்றே கூறப்படுகிறது.*

*சிறுமி ராகம பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வைத்தியப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டதுடன் சந்தேக நபரை மஹர நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.*

*இச்சம்பவம் தொடர்பில் பியகம பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி அஜித் விஜ்சிஹவின் பணிப்புரைக் கமைய பொலிஸ் பரிசோதகர் என். பிரபோதனி விசாரணைகளை நடத்தி, சந்தேக நபரை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (ரெ-15)*

## கஜேந்திரன் மீதான தாக்குதல்: நீதியான விசாரணை வேண்டும்

### சபாநாயகரிடம் செல்வம் கோரிக்கை

திருகோணமலையில் பொலிஸார் முன்னிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் முறையான நீதி விசாரணை அவசியம் என்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை ஆரம்பமான நாடாளுமன்ற அமர்வின்போது உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

"சக நாடாளுமன்ற உறுப்பினரான உத்திக பிரேமரத்ன துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திலிருந்து உயிர் தப்பியுள்ளார். அதேவேளை, திருகோணமலையில் சக



நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தாக்கப்பட்டு உயிர் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளார். இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக முறையான நீதி விசாரணை மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்" - என்று செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேலும் கூறினார். (அ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2023இல் வெளியிடப்பெற்றது.